சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரம்

வாரம் : ஜனவரி 04

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

**தேர்ச்சி : உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக " கிராபிக்" ஆக்கங்கள் படைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் : பல்வேறு தேவைகளுக்காக சுவரொட்டிச் சித்திரம் மற்றும் முகப்புறை போன்றவற்றை வடிவமைப்பார்.**

**செயற்பாடு : 'வன வளத்தைப் பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் சுவரொட்டிச் சித்திரமொன்றை வரைவோம்**

**ஒப்படை : பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுக.**

01. உங்கள் வீட்டிலுள்ள சுவரொட்டிகள், அறிவித்தல்கள், விளம்பரங்கள், முகப்புறைகள் என்பவற்றை திரட்டி அதனை நன்கு அவதானியுங்கள்.

02. அதில் காணப்படும் உருவங்கள், எழுத்துருக்கள், குறியீடுகள், வர்ணங்கள் என்பவை தொடர்பாக நன்கு அவதானித்து அவை தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்க.

03. கேத்திரக்கணித உபகரணங்களைப் பயன்படுத்தி வட்டமொன்றினை வரைந்துக்கொள்க. அதனை 8 சம துண்டுகளாக பிரித்துக் கொள்க.

04 நீங்கள் அவதானித்தவற்றைக் கொண்டு ''வனவளத்தைப் பாதுகாப்போம்'' எனும் தொனிப்பொருளுக்கு பொருத்தமான எளிமையான குறியீடுகள், உருவங்கள், வடிவங்கள், உபயோகித்து பரும்படி படத்தை வரைந்துக் கொள்க.

05 மேற்கூறப்பட்ட 1,2,3,4 படிமுறையில் பெற்றுக்கொண்ட அவதானத்தின் பின்னர் எளிமையாகவும், பொருத்தமாகவும் தொனிப்பொருளை தீவிரப்படுத்தி சமூகத்திற்கு ஓர் செய்தியை வழங்கும் முகமாகவும் சுவரொட்டியை முழுமைப்படுத்தி பொருத்தமான வர்ணங்களை பயன்படுத்தி நிறந்தீட்டுக.